Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

UNDERGRADUATE LIBRARY ... COLLEGE
19 JUN 1971

# ஈழநாடு

THE EELANADU
Nationa Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 18
இதழ் 126

யாழ்ப்பாணம் ஆனி 4 சபிஆகி 24 வெள்ளிக்கிழமை (18-6-71)

எமது
புதிய விலாசம்



கொழும்பு ஒப்ரிக்கல்
95, ஸ்ரான்லி றேட் — யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகாமை)

## சிம்மாசனப்பிரசங்கத்துக்கு நன்றிதெரிவிக்கும் பிரேரணை

# நான்கு திருத்தங்களுடன் செனட்டில் நிறைவேறியது

கொழும்பு, வெள்ளி

**சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை நேற்று செனட்சபையில் நான்கு திருத்தங்களுடன் நிறைவேறியது**

**இலங்கை சுதந்திரமடைந்தபின்னர் சிம்மாசனப்பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை செனட்சபையில் திருத்தங்களுடன்நிறைவேற்றப்பட்டது இதுவே முதல்தடவையாகும்**

எதிர்க்கட்சியினர்கொண்டு வந்த நான்குதிருத்தங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. தமிழரசுக் கட்சியினர் கொண்டுவந்த பிரேரணைகள் தோல்வியடைந்தன

செனட்சபை நேற்று செனட்சபைத் தலைவர் ஆர் இரத்தினயக்கா தலைமையில் கூடியபோது சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைமீதான விவாதம் தொடர்ந்துநடைபெற்றது

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கும், வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்என்ற பிரேரணையும் அத்தியாவசிய பொருட்கள் மலிவாகக் கிடைக்கவழி வகை செய்யப்படவில்லை என்றும் அவசரகாலச் சட்டம் ஊரடங்குச் சட்டம் ஆகியனவற்றைக் கொண்டு சாதாரண ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளதையிட்டும் வருத்தம் தெரிவிக்கும் பிரேரணையும் செனட்சபையை இல்லாமற் செய்வதற்காக ஆட்சியன்றக் கட்டத் தொடரை கலைத்து மீண்டும் கூட்டி செனட்சபையை ஒழிக்க எடுத்த நடவடிக்கையை ... தெரிவிக்கும் பிரேரணையும் செனட்டில் நிறைவேற்றப்பட்டன.

பிரசவத்துக்குப் புறப்பட்ட

## நிறைமாதக் கர்ப்பிணி மாட்டு வண்டிக்குப் பலி

யாழ்ப்பாணம், வெள்ளி

பிரசவ வேதனையால் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்த இளம் பெண் ஒருவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்வதற்கு வந்த மாட்டு வண்டி ஒன்று அந்த இளம் பெண்ணுக்கே யமனாக வந்த சோகச் சம்பவம் மல்லாவிக்கு அண்மையில் நடைபெற்றது.

மல்லாவியில் வசிக்கும் அனலைதீவை சேர்ந்த விஸ்வலிங்கம் கமலாம்பிகை என்ற பெண்ணின் மரணவிசாரணையின்போது இது தெரியவந்தது.

பிரசவவேதனையால் கஷ்டமுற்ற கமலாம்பிகையை மல்லாவி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்வதற்காக மாட்டுவண்டி ஒன்று வீட்டு

6-ம் பக்கம் பார்க்க

ஆயுதந்தாங்கிய கோஷ்டி

## மக்கள் வங்கியிலிருந்து 5 லட்சம் ரூபா கொள்ளை

கோட்டை, வியாழன்

இன்று காலை வெலிகம மக்கள் வங்கியில் ஆயுதம் தாங்கிய கொள்ளைக் கோஷ்டியினர் 5 லட்சம் ரூபாவை கொள்ளை அடித்துச் சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வங்கியில் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே இக்கொள்ளைச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இதுசம்பந்தமாக வெலிகமபொலிசார் வாடகைக் காரொன்றைக் கைப்பற்றியுள்ளனர்.

## கப்பல் பற்றி சீனாவின் வருத்தம்

### செனட்டில் சூ-என்-லாயின் கடிதம்

சீனப்பிரதம மந்திரி திரு சூ-என்-லாய் சீனாவிலுள்ள இலங்கைத் தூதுவருக்கு இலங்கையில் இடம்பெற்ற பயங்கரவாத நடவடிக்கைகள்பற்றி எழுதியகடிதத்தை செனட்சபையில் தபாலமைச்சர் திரு செ குமாரசூரியர் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் அனுமதியுடன் வாசித்தார்.

ஒரு கடிதத்தில் சீனாவின் இராணுவ உதவியும், நிதி உதவியும் பற்றி குறிப்பிட்டு இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு உதவி செய்யாமல் வேறு யாருக்கு சீனாஉதவி வழங்கமுடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது

பண்டாரநாயக்கா நினைவு மண்டப கட்டிட வேலைக்காக சீனாவிலிருந்து அனுப்பப்பட்ட சில பொருட்களை சோதனையிட்டது பற்றியும் இலங்கையில பயங்கரவாத நடவடிக்கை ஏற்படுவதற்கு சீனாவின் தலையீடு இருந்ததென்ற பத்திரிகைகளின் அறிக்கைகள் பற்றியும் வேறொரு கடிதத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. சேகுவேராவின் கொள்கையு சீனத் தலைவர் மாசே துங்கின் கொள்கையும் முரண்பாடானது என்றும் இலங்கை இராணுவ உதவி கோருவதற்கு முன்பாக இலங்கைத் துறைமுகத்திலிருந்து சீனக் கப்பல் புறப்பட்டதற்கு வருத்தம் தெரிவிப்பதாகவும் இது துரதிர்ஷ்டமான நிகழ்ச்சியென்றும் சீனப் பிரதமர் எழுதிய கடிதமொன்றில் எழுதப்பட்டுள்ளது.

உலகவங்கியினும் வழங்கப்

6-ம் பக்கம் பார்க்க

அரசியல் நிர்ணயசபையில்

## தமிழரசுக் கட்சியின் திருத்தம் தோல்வி

கொழும்பு, வியா.

ஓர் ஆட்சிமன்றத்தொகுதி அங்குள்ள ஜனத்தொகையின் அடிப்படையில் இல்லாமல் உண்மையான வாக்காளர்களின் தொகையைக் கருத்திற்கொண்டு பிரிக்கப்படவேண்டும் என்ற தமிழரசுக்கட்சியின் திருத்தப் பிரேரணை அரசியல் நிர்ணயசபையில் தோல்வியடைந்தது.

ஒத்திவைக்கப்பட்டிருந்த ஆறுவது அடிப்படைத் தீர்மானத்தின்மீதான விவாதம் நேற்றுத் தொடர்ந்து நடைபெற்றது இத்தீர்மானத்தை ஆதரித்து தமிழரசுக்கட்சியினர் மட்டுமே வாக்களித்தனர். உடுவில் எம்.பி திரு வி தர்மலிங்கம் இப்பிரேரணை மீது பேசுகையில், தற்போது 75,000 மக்களுக்கு ஒவ்வொரு தொகுதி என்றிருந்தாலும் கூட, சில தொகுதிகளில் மிகக் குறைந்த வாக்காளர்களே இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்.

### டட்லியின் திருத்தம்

ஒன்றுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக்கொண்டதேர்தல் தொகுதிகளை புதியஅரசியலமைப்பில் அகற்றக்கூடாதென்றும் இதனை அகற்றுவதினால் இலங்கைப்பிரஜாவுரிமைபெற்ற இந்தியத் தோட்டத் தொழிலாளர்களுக்கென இப்போதுஇருந்துவரும் தனிப் பிரதிநிதித்துவம் இல்லாமல் போய்விடுமென்றும் திரு. டட்லிசேனநாயகா திருத்தம் ஒன்றைக் கொண்டுவந்தார். நியமன எம் பி திரு அசீசும்இரட்டை அங்கத்தவர் தொகுதி முறை நீக்கப்படாது என்று கூறினார்.

இதற்குப் பதிலளித்த அரசியல் விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா பேசுகையில் இரட்டை அங்கத்தவர் தொகுதியை அகற்றும் திட்டம் இல்லை என்று தெரிவித்தார்.

திரு பிறின்ஸ் குணசேகரா பேசுகையில் கூறியதாவது: தேசியசபையின் அங்கத்தவர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களாக இருப்பார்கள் என்று அடிப்படைத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. அதே வேளையில் இப்போதுள்ள

(6-ம் பக்கம் பார்க்க)

## நன்றி நவிலல்

13-6-71-ந் திகதி ஞாயிறன்று தொண்டமனாறு செல்வச்சன்னிதி கோவிலில் நடைபெற்ற எமது திருமணத்தின்போது நேரில் சமூகமளித்து எம்மை வாழ்த்தி, பரிசில்கள் வழங்கி மற்றும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பி எம்மை மகிழ்வித்த நண்பர்கள், உறவினர் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஞானகுரு தம்பதிகள்

வரிக்காடு,
வல்வெட்டித்துறை.

2855

## வரி விளம்பரம்

**WANTED**

Wanted immediately teacher for Chemistry A/L & O/L. Apply: Principal, Prince Academy, Chavakachcheri. 3191

**தேவை**

பிறின்ரிங், ரச்சிங் அனுபவமும் 30 வயதிற்குட்பட்டவரும், ஸ்ருடியோவில் வேலை செய்வதற்கு தேவை. விபரங்களுக்கு: மனேச்சர், லக்கி ஸ்ரூடியோ, மன்னார். 3189

**விற்பனைக்கு**

1 1/2 பரப்பு நிலம். நல்லூர் கோயில்வீதியில் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும். பொ. யோகேஸ்வரன், 167/2, கோவில்ரோட், யாழ்ப்பாணம். 3180

**வீடு**

யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவில் சகல வசதிகளுடன் கூடிய பெரிய வீடு விற்பனைக்குண்டு. விலை குறைக்கப்பட்டு இருப்பதால், முதலில் பார்வையிடுபவர்களும் விரும்பினால் வரவும். விபரங்களுக்கு: 40, இரண்டாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 3193

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

**தவறிவிட்டது**

15-6-71-ல் மயிலிட்டி—காங்கேசன்துறை வீதியில் லேடிஸ் கைக்கடிகாரம் கண்டெடுத்தவர்கள் "ஈழநாடு" காரியாலயத்தில் கொடுக்கவும். திருமதி செல்லையா, நெஞ்சு நோய் நிலையம், காங்கேசன்துறை 3192

## கண்ஞேயாளர்

கோட்டை, வியாழன்

கொழும்பு நகரில் இதுவரை ஒரு லட்சத்துக்கு மேற்பட்டோர் கண்ணோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

இத்தகவலைச் சுகாதார அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் வெளியிட்டார். தற்போது இந்நோயின் ஆபத்துக் குறைந்துவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வெளி மாகாணங்களிலும் தற்போது இந்நோயாளர் எண்ணிக்கை குறைந்துவருவதாகத் தெரிகிறது


ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 5-30
வஹிதா ரஹ்மான் ராஜ்குமார் நடித்த
நீல்கமாள்
(வர்ணம், ஹிந்தி)
இத்துடன் 'பிலிம்பெயர்' பரிசளிப்புவிழா காட்சிகள் கலரில் காண்பிக்கப்படும்.


## அமைச்சருக்கு மகஜர்

பருத்தித்துறை, வியா

"கூட்டுறவு முறையிலுள்ள வாழ்க்கையை ஒழித்து பாவனையாளருக்குரிய தேவைகளைப் பூர்த்தி செய்யத் தாங்கள் எடுக்கும் முயற்சிகளைப் பாராட்டும் அதே வேளையில் கட்டைவேலி கூட்டுறவு ஆரம்ப சங்கத்திற்கென ஒரு பெற்றோல் நிலையமும் மண்ணெண்ணை நிலையமும் அமைக்க உதவ வேண்டும்."

இவ்வாறு கனுவில் சனசமூகநிலையம் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தினவுக்கு அனுப்பியுள்ள மகஜரில் குறிப்பிடுள்ளது. தொடர்ந்து அம்மகஜர் கூறிவதாவது:

கூடியளவு கூட்டுறவு நிறுவனங்கள் தமக்குரிய நிலங்களில் கட்டப்படுவதே வரவேற்கத்தக்கது. மேலும் சிறுபான்மைத் தமிழர்பெருமளவில் வாழும் பகுதிகளில் அவர்களுக்கென கூட்டுறவுப் பண்டகசாலைகள் இயங்குவது விரும்பத்தக்கது.

மேற்படி அமைச்சர் அண்மையில் கட்டைவேலி கூட்டுறவு ஆரம்பசங்கத்திற்கென நியமித்த நாலு நிர்வாகிகளுக்காகவும் சனசமூக நிலையம் நன்றி தெரிவித்துள்ளது.

......

## மகாஜன பரிசளிப்பு விழா

மாவிட்டபுரம், வியா.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இம்மாதம் 24-ம் திகதி நடைபெறவிருக்கிறது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பரிசளிப்பும், ஸ்தாபகர் நினைவுதினமும் இம்மாதம் 24-ம் திகதி கல்லூரி அதிபர் திரு. மா. மகாதேவா தலைமையில் கல்லூரி திறந்த வெளியரங்கில் நடைபெறவிருக்கிறது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கல்வியமைச்சின் பாராளுமன்ற மேலதிகநிரந்தரச் செயலாளர் திரு. கே. எச். எம். சுமதிபாலா கலந்து கொள்கிறார்.

கல்லூரி மாணவ மாணவிகளின் நடன, நாடக நிகழ்ச்சிகளும் இவ்விழாவில் இடம்பெறும்


ராணி (யாழ்ப்பாணம்)
காலை 10 3 பி. ப. 2-00 மாலை 5-30
ரவிச்சந்திரன் - லட்சுமி
தங்கவேலு - விஜயஸ்ரீ
நடித்த
ஜீவநாடி

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, பி. ப. 2. மாலை 5.30
முத்துராமன்—லக்ஷ்மி,
நாகேஷ்—ராகினி
நடித்த
நவக்கிரகம்

வின்ஸர்— யாழ்ப்பாணம்
காலை 10-30 பி. ப. 2-00 மாலை 5 30
ஜெய்சங்கர், பாரதி,
சுந்தரராஜன், நம்பியார்; நாகேஷ்
நடித்த
நில்! கவனி!! காதலி!!!

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-00, பி. ப. 1-45, மாலை 5-30 மணி
★ சிவாஜிகணேசன்
★ ஜெமினி கணேசன்
★ சாவித்திரி
நடித்த
பாசமலர்

கெப்பிட்டல்
காலை 10, பி. ப. 2-00 மணி
எங்கவீட்டுப் பிள்ளை

லிங்ஸ்லி
காலை 10, பி. ப. 2-00 மணி
முதலாளி

ஹைலன்
காலை 10, பி. ப. 2-00 மணி
தாய்சொல்லை தட்டாதே

பிளாஸா
காலை 10, பி. ப. 2-00 மணி
எங்கவீட்டுப் பிள்ளை

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி பி. ப. 2-30, 6-00
ராஜன் - நிர்மலா
நடித்த
சக்கரம்

நாகம்ஸ்சினிமா
சுன்னாகம்
தினசரி பி. ப. 2-00, 6-00
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
விடிவெள்ளி

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி பி. ப 2-30, 5-30
சிவாஜி - ஜமுனா
நடித்த
நிச்சய தாம்பூலம்

ரீகல்— யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30
பி. ப. 2-30
முத்துராமன்-கே ஆர் விஜயா
நாகேஷ்
நடித்த
நாணல்
Daily 6-30 p. m
Ursula Andress
in
THE SOUTHERN STAR
(Color)


### உதைபந்தாட்டம்

## 'பொம்பஸ்' கழகத்திடம் 'சம்சுன்' தோல்வி!

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ் உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் யாழ். மாவட்டக் கழகங்களிடையே நடாத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வதிரி 'பொம்பஸ்' விளையாட்டுக் கழகத்துக்கும், 'சம்சுன்' விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற 'பி' பிரிவுப் போட்டியில் 'பொம்பஸ்' கழகம் மிக இலகுவாக வெற்றி பெற்றது.

இந்தப்போட்டியில், ஆரம்பத்திலிருந்து முடிவடையும் வரை பொம்பஸ் கோஷ்டி மிகச் சிறப்பாக விளையாடியது.

இடைவேளைக்கு முன்பாக பொம்பஸ் கோஷ்டியினர் 5 கோல்களைப் போட்டுவிட்டனர். சம்சுன் கோஷ்டி ஒரு கோலைமட்டுமே போட்டது.

இடைவேளையின் பின் பொம்பஸ் கோஷ்டி நிதானமாக விளையாடிய போதிலும், மேலும் இருகோல்களை மேலதிகமாகப் போட்டது. ஆட்டம் முடிவடையும் போது பொம்பஸ் கழகம் 7—2 கோல்களால் சம்சுன் கழகத்தை தோற்கடித்தது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. கிருஷ்ணன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

(தே நி)

## மாணவியின் சோக முடிவு!

யாழ்ப்பாணம், வியாழன்

பரீட்சையில் சித்தியடையத் தவறியதால் மனமுடைந்த மாணவி தற்கொலை செய்துகொண்டார். இச் சோக சம்பவம் இணுவில் என்னுமிடத்தில் நடந்துள்ளது. செல்வி வி நாகேஸ்வரி என்னும் மாணவியே இப்பரிதாப மரணத்திற்குள்ளானவராவர்.

கொக்குவில் பொலிரெக்னிக் மாணவியான இவருக்கு வயது 23. முதலாமாண்டு வணிகத்துறைப் பரீட்சையில் சித்தியடையத் தவறியதாகவும், இதனால் அம்மாணவி சில தினங்களாக மனமுடைந்து காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. பெற்றோர் அருகிலுள்ள கோவிலொன்றிற்குத் திருவிழா பார்க்கச் சென்றிருந்தபோது இவர் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டாராம்.

(உடுப். நி)

## "இசைக் கலைஞர்களை போற்றி கௌரவிக்க வேண்டும்"

தாவடி, வியாழன்

"கவலைகளை மறந்து இன்ப உலகில் சஞ்சரிக்கச்செய்ய வல்ல சிறப்பியல்பு படைத்தவர்கள் இசைக் கலைஞர்கள். இராவணன் இசையில் வல்லவன். இறைவனைத் தன் இசையின்ப வெள்ளத்தில் மூழ்கச்செய்து வரம்பெற்றவன் என்றெல்லாம் நூல் வாயிலாக அறிகின்றோம். ஆனால் தற்போது இசையாளர்களின் திறமையையும், அவர்கள் அளிக்கும் பேரின்பத்தையும் நுகர்வது கண்கூடாகும். பண்டைய நாளிலே பாண்டியராதியாம் மன்னவர்கள், புலவர்களையும், இசைமேதைகளையும், கௌரவித்தார்கள், போற்றினார்கள். அந்தப் பரம்பரையில் வந்த நாமும் இசைக் கலைஞர்களைப் போற்றிக் கௌரவித்தல் வேண்டும். இசைக் கலைஞர்கள் தெய்வீகத் தன்மையுடையவர்கள்"

இணுவில் அம்பலவாணக் கந்தசுவாமி ஆலய உற்சவத்தின்போது இன்னிசைக் கச்சேரி நடாத்திய, அளவெட்டி சங்கீதபூஷணம், திரு வி கே நடராசாவைப் பாராட்டிப் பொன்னாலான பதக்கம் பரிசளிக்கப்பட்ட வைபவத்தில் உரையாற்றிய ஆசிரியர் திரு. க கதிரவேல் மேற்கண்டவாறு கூறினார்.

உடுவில் கிராம சபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கம் அன்பளிப்புச் செய்த பதக்கத்தை, மேற்படி தேவஸ்தான முதல்வர் திரு நடராசாவுக்குச் சூட்டிக் கௌரவித்தார்.

## "விஞ்ஞான ஆசிரியரைத் தருக"

பருத்தித்துறை, வெள்ளி

"கிராமப்பகுதிப் பாடசாலைகளில் விஞ்ஞானக் கல்வி வளர்ச்சியை ஊக்குவிப்பது அரசாங்கத்தின் கொள்கையாக இருந்த போதிலும், எமது பாடசாலைக்கு இதுவரை விஞ்ஞான ஆசிரியர் தரப்படவில்லை, விஞ்ஞானக் கல்விக்கான போதிய ஆய்வுகூட வசதிகள் செய்து தரப்படவில்லை"

இவ்வாறு நாகர் கோவில் மகா வித்தியாலய அதிபர் திரு. வி தம்பிராசா, வடமாநிலக் கல்வி அதிபதி திரு. டபிள்யூ டீ. சீ. மகாதந்திலாவுக்கும், பருத்தித்துறை எம். பி. திரு கே. துரைரத்தினத்திற்கும் அனுப்பியுள்ள மகஜர் ஒன்றிற் குறிப்பிட்டுள்ளார். மேலும், தற்பொழுதுள்ள கொட்டில்களை நிரந்தரக் கட்டடங்களாக்கித் தருமாறும் அம்பன், குடத்தனை, நாகர் கோவில் ஆகிய பகுதிகளுக்கு இது ஒன்றே மகாவித்தியாலயமாக விளங்குகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இடமாற்றம்

தாவடி, வியாழன்

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ். கிளையில் கடமையாற்றி வந்த சிரேஷ்ட அதிகாரி திரு. ஏ நவரத்தினம் அனுராதபுரத்திலுள்ள காப்புறுதிக் கூட்டுத்தாபனக் கிளைக்கு மாற்றலாகியுள்ளார்.

### தென்னாபிரிக்காவில்

## 14 பேர் மீது சதி வழக்கு

கேப்டவுன், ஜூன் 17

தென்னாபிரிக்க அரசாங்கத்தைக் கவிழ்க்க முயற்சி செய்ததாக 14 பேர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றது. இந்தப் பதினாலு பேரில் கறுப்பர்களுடன் வெள்ளையர்களும் இருக்கிறார்கள். வெளிநாட்டு உதவியுடன் இந்தச் சதியில் இவர்கள் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றது

# கி. வங்கத்தில் அரசியல்தீர்வுகாணாவிட்டால்

# பாகிஸ்தானுக்கான உதவிகளை மேற்கு ஜெர்மனி நிறுத்தும்!

## அகதிகளுக்கு உதவும்படி யுதாண்ட் மீண்டும் கோரிக்கை

### அதிபர் நிக்ஸனுடன் சுவர்ண்சிங் ஆலோசனை

பொன் ஜூன் 17

கிழக்குவங்காள நெருக்கடிக்கு உடனடியாக அரசியல் தீர்வொன்று காணப்படாவிட்டால் பாகிஸ்தானுக்கு மேற்கு ஜெர்மன் அரசாங்கம் வழங்கிவரும் உதவிகள் யாவற்றையும் நிறுத்தப்போவதாக அறிவித்திருக்கின்றது.

இந்தியாவில் வந்துகுவிந்துள்ள கிழக்குப்பாகிஸ்தான் அகதிகளுக்கு தாராளமாக உதவிகளை வழங்கும்படி ஐ. நா. பொதுச்செயலாளர் யுதாண்ட் உலகநாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

இந்திய வெளிஉறவு அமைச்சர் நேற்று அமெரிக்க அதிபர் நிக்ஸனைச் சந்தித்து கிழக்குவங்காள அகதிகள் நிலைமையற்றி எடுத்துவிளக்கினார்.

கிழக்கு வங்காள நிலைமைக்கு உடனடியாக அரசியல் தீர்வுஒன்று காணப்பட வேண்டும் இல்லையெனில் பாகிஸ்தான் வளர்ச்சித் திட்டங்களுக்கு வழங்கிவரும் உதவிகள் நிறுத்தப்படும் என்று மேற்கு ஜெர்மனி அறிவித்திருக்கின்றது.

கிழக்குப்பாகிஸ்தான் நெருக்கடிக்கு அமைதியான அரசியல் தீர்வுஒன்றுகாணப்படவேண்டும் என்று மேற்கு ஜெர்மனி வலியுறுத்தியிருக்கின்றது.

**வரலாற்றில் இல்லாத சம்பவம்**

கிழக்கு வங்காளத்தில் ஏற்பட்டுள்ள நிலைமை இதுவரை வரலாற்றில் காணப்படாதவொன்றென ஐ நா பொதுச் செயலாளர் யுதாண்ட் வர்ணித்திருக்கிறார் மனிதமுயற்சிக்கு சவால் விடும் இந்தகிழக்கு வங்காள



நிலைமையைச் சமாளிக்க உலகநாடுகள் யாவும் முன்வந்து உதவ வேண்டும் என்று யுதாண்ட் கேட்டுக் கொண்டார்.

இந்தியாவுக்குள் வந்து குவிந்துள்ளவர்களுக்கும் கிழக்குப்பாகிஸ்தானிலிருப்பவர்களுக்கும் பெருமளவில் உதவிகள் புரியும்படி யுதாண்ட் உலக நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

அகதிகளுக்கான உதவிகள் பற்றிய முடிவுகள் எடுப்பதற்காகத்தான் ஐ நா.தலைமை நிலையத்திலேயே இருக்க வேண்டும் என்பதால் அடிசபாபாவுக்கான தமது விஜயத்தை அவர் ரத்துசெய்



துள்ளார். அடிசபபாவில் ஆபிரிக்கநாடுகளின் ஒற்றுமைஸ்தாபன மகாநாட்டில் பேசுவதற்காக யுதாண்ட் போகவிருந்தார். சோவியத் யூனியனுக்கும் போலந்துக்கும் மேற்கொள்ளவிருந்த விஜயங்கள் பற்றியும் கிழக்குப் பாகிஸ்தான் நிலைமைகாரணமாக இன்னமும் யுதாண்ட் முடிவு எடுக்காமலிருக்கிறார்.

**நிக்ஸனுடன் சுவர்ண்சிங் ஆலோசனை**

இந்திய வெளிஉறவு அமைச்சர் திரு. சுவர்ண் சிங் நேற்று அமெரிக்க அதிபர் நிக்ஸனை சந்தித்துசுமார் 45 நிமிடங்கள் ஆலோசனை செய்தார். இந்தியாவில் வந்துகுவிந்துள்ள அகதிகளுக்கான உதவிகள் வழங்கும் விஷயத்தில் கணிசமான அளவு பங்கை அமெரிக்கா ஏற்கும் என்று அதிபர் நிக்ஸன் திரு. சுவர்ணசிங்கிடம் வாக்குறுதியளித்ததாகத் தெரிகின்றது.

திரு. சுவர்ண்சிங் முன்பதாக அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. ரோஜர்ஸையும் சந்தித்துப் பேசினார்.

**பிரான்ஸ் 20லட்சம்டொலர் உதவி**

இந்தியாவில் வந்து குவிந்துள்ள அகதிகளின் நிவாரணத்துக்கென பிரஞ்சு அரசாங்கம் 20 லட்சம்டொலர் பெறுதியான உதவிகளை வழங்க முடிவுசெய்திருக்கின்றது. கனடா அரசாங்கம் 12 லட்சத்து 50 ஆயிரம் பெறுமதியான உதவிகளை ஒதுக்கியிருக்கின்றது. கனடா ஏற்கனவே ஒதுக்கிய 20லட்சம் டொலர்உதவியின் ஒரு பகுதியாகும் இது.

பிலிப்பயின் செஞ்சிலுவைச் சங்கம் கிழக்கு பாகிஸ்தான் அகதிகளுக்கென ஒரு கப்பல் நிறையப் பொருட்களை அனுப்பிவைத்துள்ளது.

கிழக்குப்பாகிஸ்தனிலிருந்து அகதிகள் இந்தியாவுக்குள் நுழைவது நின்றுவிட்டதாக பாகிஸ்தான் அகதிகள் இதை அறிவித்திருக்கிறார்கள். கிழக்குப் பாகிஸ்தானில் மாமூல் நிலைமை உருவாகி விடுவதே இதற்குக்காரணமாம். ஆனால் அகதிகள் வருகை மேலும் அதிகரித்திருப்பதாகவே இந்தியச் செய்திகள் கூறுகின்றன.



## பொதுவிஞ்ஞான வகுப்புகள்

பருத்தித்துறை, வியா. வடபகுதிப் பாடசாலைகளிலுள்ள பொதுவிஞ்ஞானம் போதிக்கும் ஆசிரியருக்கான பயிற்சி வகுப்புகள் இம்மாதம் 29ந் திகதி தொடக்கம், மூன்று கல்வி வட்டாரங்களைக் கொண்டு மூன்று முதன்மை ஆசிரியரால் நடாத்தப்படவுள்ளன. போயாதினத்திலும் அதற்கு முன்தினத்திலும் நடக்கவிருக்கும் பயிற்சி வகுப்புகளிற் கலந்துகொள்ளும் ஆசிரியருக்குக் கடமை லீவு வழங்கப்படும். அவர்களுக்கான மதிய போசனமும் பிற்பகல் தேநீரும் வழங்கப்

## பொலிஸாருக்கு எதிராக 1,310 புகார்கள்

### 1970-ம் ஆண்டில் தான்

கொழும்பு, வியாழன் ஓர் ஆண்டில் பொலிஸாருக்கு எதிராக 1,310 புகார்கள்! இந்த சாதனையை 1970ம் ஆண்டு பெற்றுள்ளது. பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு அலரிக் அபயகுணவர்த்தன வெளியிட்டுள்ள நிர்வாக அறிக்கையில் இந்த விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களைப் பொலிஸார் தாக்கியதாக 503 புகார்களும், பொலிஸாருக்கு உரிய அதிகாரங்களைத் துர்ப்பிரயோகம் செய்ததாக 169 புகார்களும், கைலஞ்சம் சம்பந்தமாக 44 புகார்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன. இதேசமயத்தில் பொலிஸாரைத் தாக்கியதாகக் கூறப்படும் 82 சம்பவங்கள் நடந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் 53 பொலிஸாருக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளன. 1970ம் ஆண்டு நாட்டிலிருந்த பொலிஸாரின் மொத்த எண்ணிக்கை 11,004. (சி பி ஏ)

## 'பாடசாலை வளர்ச்சிக்கு அவசியமானது'

யாழ்ப்பாணம், வெள்ளி "பாடசாலையின் வளர்ச்சிக்கு பெற்றோர்-ஆசிரியர் சங்கம் அவசியம். பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கைகள் அலட்சியம் செய்யப்பட்டால் பாடசாலை முன்னேறாது. முன்னாள் தலைமை ஆசிரியரின் சேவையை நீடிக்கும்படி பெற்றோர் ஆசிரியர் சங்கம்விடுத்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படாததினால்தான் முன்னாள் தலைமை ஆசிரியர் ஆரம்பித்த திறந்தவெளியரங்கும், விளையாட்டு மைதானமும் இன்னும் பூர்த்தியாகாமல் இருக்கின்றன"

கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாசாலை பெற்றோர் ஆசிரியர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் திரு. எஸ். சுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினார்.

பதில் தலைமை ஆசிரியர் திரு வி. கனகசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், பாடசாலை கிணற்றில், பொதுப்பாவிப்புக்குவிடப்பட்ட பகுதியையும், பாடசாலைவளவுடன் சேர்த்து அடைப்பதென தீர்மானிக்கப்பட்டது.

புதுவருட உத்தியோகத்தர்கள் விபரம் வருமாறு: தலைவர்: திரு வி கனகசிங்கம், செயலாளர்: திரு சி செல்லத்துரை. தனாதிகாரி: திரு கே இராசதுரை. நிர்வாக உறுப்பினர்கள் திருவாளர்கள் சி செல்லையா, வி பாலசிங்கம், ஆ கணபதிப்பிள்ளை, வி இராசையா.

## நாதஸ்வரக் கலைஞருக்கு 'மல்லாரிசக்கரவர்த்தி' பட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி 'சங்கீத இராகம் அருகிவரும் இந்தநாட்களில் நாட்டை இராகத்தை திரிகாலசுத்தியுடன் நாதஸ்வரத்தில் வாசிப்பவர் திரு முருகப்பா பஞ்சாபிகேசன், இவருக்கு 'மல்லாரி சக்கரவர்த்தி' என்ற பட்டம் அளிப்பது பொருத்தமானதேயாகும்'

இவ்வாறு சைவத் திருமணி சங்கீதபூஷணம் சி விதாசிதம்பி. நாதஸ்வர வித்துவான் பஞ்சாபிகேசனுக்கு 'மல்லாரி சக்கரவர்த்தி' என்ற பட்டத்தைச் சூட்டிப் பேசுகையில் குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் பேசியதாவது:

கர்நாடக சங்கீதத்தை நாதஸ்வரம் வாசிப்போர் இந்தியாவிலும் இலங்கையிலும் ஆண்டாண்டு காலமாக வளர்த்துவந்துள்ளனர் எமது சந்ததியினருக்கும் நாட்டுக்கும் தலைவிருட்சமாக இருந்து கலைத்தொண்டு புரியும் 'மல்லாரிச்சக்கரவர்த்தி' பஞ்சாபிகேசன் வாழையடி வாழையாகத் தனது புகழ்பெற்ற கலையைப் படித்தவர், அவரது தந்தையும் சகோதரரும் தகுந்த கலைஞர்களாக வாழ்கின்றார்கள். இப்படியான கலைஞர்கள்தான் நாட்டின் மறுமலர்ச்சிக்கு சாதிப்பவர்கள்

மட்டுவில் விளைவேலி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் தீர்த்தோற்சவ விழாவில் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. பிரம்மஸ்ரீ ஐ ஞானசர்மா தலைமையில் விழா நடந்தது (கு-வி-ம)

படவிருப்பதாகவும் தெரிகிறது

## இவர்களுக்கு ஆபத்து!

குருநகர், வியா லைசென்ஸ் இல்லாது சைக்கிள் பாவிப்பவர்களுக்குத் தண்டனை கொடுக்கும் நடவடிக்கையில் யாழ். மாநகரவரி அறவிடும் பகுதியினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். சட்டத்திற்கு விரோதமாக சைக்கிள்களுக்கு நம்பர் தகடுகள் பாவிக்காமல் இருப்பவர்களைக் கண்காணித்துப் பிடிப்பதில் இவர்கள் இன்று தொடக்கம் ஈடுபட்டுள்ளனர். ஆரம்ப நாளான இன்றே நூற்றுக்கு மேற்பட்ட சைக்கிள்கள் பிடிபட்டன. லைசென்ஸ் இல்லாத சைக்கிள் பாவிப்பவர்களிடமிருந்து ரூபா 5 குற்றப் பணமாக அறவிடப்படுகிறது.

கொக்குவில் இந்துக்கல்லூரி வளர்ச்சிக்காக

# தன்னலம்கருதாதுஉழைத்தஅதிபர்

கொக்குவில் இந்துக்கல்லூரிக்கென்றே பிறந்து தனது சேவைகளை யெல்லாம் மலைபோல் ஒருங்கே திரட்டி அக்கல்லூரியின் வளர்ச்சியில் இரண்டறக் கலந்து உழைத்தவர் இப்பொழுது இளைப்பாறி இருக்கும் அதிபர் திரு. சின்னப்பா கனகரத்தினம் அவர்கள்.

1940-ம் ஆண்டு கொக்குவில் இந்துக்கல்லூரியில் உதவி ஆசிரியராகப் பணி புரிந்து பின் 1945-ம் ஆண்டு கல்லூரியின் பதில் அதிபராகக் கடமையாற்றினார். தன்னுடைய வயதுக்கு அதிபர் பதவி சரியில்லை யென்றோ என்னவோ தெரியவில்லை. 1946-ம் ஆண்டு யாழ் இந்துக்கல்லூரியில் பணிபுரிந்த திரு. வி. நாகலிங்கத்தை அதிபராக வரும்படி கோரினார், தன்னலம் கருதாது திறமைக்கும் ஆற்றலுக்கும் முதலிடம் கொடுப்பவர் அவர்.

ஆசிரியர்களுக்கு அரசாங்கத்தால் அவர்களது திறமைக்கும் சேவைக்கும் மதிப்பளித்துக் கௌரவிக்குமுகமாக வழங்கப்படும் முதலாம் தர ஆசிரியர் பதவி 1947-ல் இ. க. கந்தசாமி அவர்களுக்குக் கிடைத்தது. யாழ்ப்பாணத்தில் உள்ள ஆசிரியர்கள் அநேகம்பேருக்கு இப்பதவி வழங்கப்பட்டபோதும் வயதில் குறைந்த முதலாவது யாழ்ப்பாணத்தவர் என்ற பெருமைக்குரியவராவர். முதலாம்தர ஆசிரியர் பதவி ஏற்று இருவருடங்களின் பின் உதவி அதிபராக அக்கல்லூரியிலேயே பணிபுரிந்தார். அப்போது ஹண்டி பேரின்பநாயகம் அவர்கள் அதிபராகக் கடமையாற்றி வந்தார். 1959-ல் பேரின்பநாயகம் அவர்கள் இளைப்பாற கல்லூரியின் அதிபர் பதவியைப் பொறுப்பேற்றார்.

"சூப்பர் கிறேட்" டுடன் கொக்குவில் இந்துக்கல்லூரியில் பன்னிரண்டு ஆண்டு காலம் அதிபராகக் கடமையாற்றிய இவர் தனக்கு முன்பதாக இருந்த அதிபர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி கடமையில் கண்ணும் கருத்துமாய் 'எனது வளர்ச்சியே உயர்ச்சியே கல்லூரியின் வளர்ச்சி என்றும், உயர்ச்சி என்றும் கருதி கல்லூரியின் கல்வி வளர்ச்சியிலும் அதன் புற வளர்ச்சியிலும் ஈடுபட்டுழைத்தபெரியார், உள்ளம் அமைதி காண சேவையின் கடந்த காலச் சிறப்புகளை நினைவுகூர இளைப்பாறியுள்ளார்.

எதையும் சிந்தித்து மற்றவர்களுடன் கலந்து பேசி சச்சரவுகளுக்கோ பிணக்குகளுக்கோ இடங்கொடுக்காது அமைதியான முறையில் எல்லோரும் வரவேற்கத்தக்க ரீதியில் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதில் வல்லவர். யாழ்ப்பாணத்தில் உள்ள பெரிய கல்லூரிகளுடன் கல்வியிலும் சரி விளையாட்டுத் துறையிலும் சரி. சாரணியத் துறையிலும் சரி இக் கல்லூரியைச் சமநிகர் சமானமாகத் திகழச் செய்த பெருமைக்குரியவர் கல்லூரியில் இருந்து தனது தொடர்பை உத்தியோகபூர்வமாகத் துண்டித்துக்கொண்டபோதும் உத்தியோகப்பற்றற்ற முறையில் மேன்மேலும் சேவைசெய்ய காத்திருக்கும் கந்தசாமி அவர்கள் பல்லாண்டுகாலம் நீடு வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

—எம். வாமதேவன்

## வீதி திருத்தப்படுகிறது

தாவடி, வியா

கோண்டாவில் புகையிரத நிலைய வீதி திருத்தம் செய்யப்பட்டு வருகிறது.

இதுவரை காலமும் வாகனங்களின் போக்குவரத்துக்கு மிகவும் கஷ்டமாயிருந்தன.

## பிரதமர் நன்றி

பருத்தித்துறை, வியாழன்

கோவிற்கடவை கிராம முன்னேற்றச் சங்கம் அண்மையில் தம்மைப் பாராட்டியதற்கும் பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு அனுதாபம் தெரிவித்து அதற்கான நிதியாக ரூபா 500 அனுப்பியதற்காகவும் மேற்படி கி. மு. சங்கத் தலைவரும் நாகர்கோவில் மகாவித்தியாலய அதிபருமான திரு. வி. கந்தராசாவுக்கு பிரதமர் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்கா நன்றி தெரிவித்து ஒரு கடிதம் அனுப்பியுள்ளார்.

## இன்றைய பலன்

ஆனி மாதம் 4-ந் திகதி

(18-6-71)

மேஷம்- இல்லம் இன்று கட்டிவெல்லம்போல் இனிக்கும். இனிய வார்த்தைகளின் மூலம் மற்றவர்களைக் கவர்ந்துகொள்ளுவீர்கள்.

ரிஷபம்- நினைத்த காரியத்தில் தடை ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகும். சிலரின் கண்டனங்களுக்கும் இலக்காக நேரிடலாம்.

மிதுனம்- ஆராய்ச்சிகளில் அதிக ஆர்வம் பிறக்கும். வாகனத்தின் மூலம் அதிக பொருள்வரவுக்கும் இடமுண்டு. இன்று நல்லநாள்.

கடகம்- நீண்டநாட்களின் பின்பு இன்று நிறைவான தினம், எதிர்பார்த்த பொருள் வரவு கைவந்து சேரும். இன்று குடும்பத்தில் சுவையான நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

சிம்மம்- மிகவும் நிதானத்துடன் காரியங்களில் ஈடுபடவேண்டும் எச்சந்தர்ப்பத்திலும் அவசரப்போக்கை தவிர்த்துக்கொள்ளவும்.

கன்னி- ஆனந்தமயமான வாழ்க்கை அன்பர்களின் வருகை உங்களை உற்சாகப்படுத்தும்- கணவன் மனைவி உறவு முறைகள் மிகவும் நெருக்கமாக இருக்கும்.

துலாம்- சூழ்ச்சிவலை பின்னும். அடுத்துக்கெடுப்பவர்கள் அருகிலேயே இருப்பர். சகோதரவழியால் சஞ்சலமான சம்பவங்கள் இடம் பெறும்.

விருச்சிகம்- இறைவழிபாடு மேவிடும். இதயத்தில் அமைதியும் ஏற்படும் பிதாவழி மூலம் நல்ல செய்திகளும் கிடைப்பதற்கு இடமுண்டு.

தனுசு- பலகாலம் எதிர்பார்த்திருந்த பதவிஉயர்வுக்கு வழிகோலப்படும். சிலருக்கு புதிதாக தொழில் கிடைக்கும். அத்துடன் வருவாயும் வளரும்.

மகரம்- இன்று அதிக ஆதாயம் கிடைக்கும். புதுத்தொழில்முறைகளை மனம் நாடும். நீண்ட பிரயாணத்துக்கும் இடமேற்படலாம்

கும்பம்- அற்பவிடயத்திற்கும் ஆத்திரப்படுவீர். நெருங்கிய நண்பர்ஒருவரை பகைத்துக்கொள்ள நேரிடலாம். அடக்கம்வேண்டும்.

மீனம்- அவசரப்புத்தியினால் விபரீதங்கள் விளையலாம். கோபத்தை அடக்கின் நிலைமை சீர்பெறும். எடுத்தகாரியத்திலும் தாமதம் ஏற்படலாம்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## பனங்கட்டி தொழிற்சாலை நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

இலந்தைக்காடு பனங்கட்டித் தொழிற்சாலை அமைப்பு நிர்வாக உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: வ. கந்தையா, உபதலைவர்: சி. பொன்னுத்துரை, காரியதரிசி: ச. துரைராஜா. உபகாரியதரிசி: கி. அழகையா, தனாதிகாரி: ச. கந்தசாமி, உபதனாதிகாரி: க. நவரத்தினம் 9 பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

புதிய நிர்வாக சபையினர் தொழிற்சாலைக்கட்டிடத்தை விரைவில் பூர்த்தி செய்வதென முடிவுசெய்தனர்.

காரியதரிசி திரு. துரைராசா பேசுகையில் இத்தொழிற்சாலை மிக நல்ல நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டதென்றும் இது பூர்த்திசெய்யப்பட்டு இயங்கத்தொடங்கினால் நமது கிராமத்துக்கும் பொதுவாக நாட்டுக்கும் மிக உதவியாக இருக்குமென்றும் வேலையில்லாத் திண்டாட்டம் நீங்க இதுபெரிதும் வழி அமைப்பதாக இருக்குமென்றும் இதன் முழுவெற்றியிக்கு எல்லோரும் எவ்வித வேற்றுமையும் இன்றி ஒத்துழைப்புத்தர வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

(கு. வி. ம.)

## பரிபாலன சபை நிர்வாகிகள்

குருநகர், வியாழன்

மண்டைதீவு கண்ணகை அம்மன் கோவில் பரிபாலன சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் நேற்று மாலை முத்துமாரியம்மன் ஆலய முன்றலில் நடைபெற்றது. புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் செ. அருளானந்தம், செயலாளர் அ. சி. குலிங்கம், பொருளாளர் அ. ஜெயகுணதிலகம், இ. கந்தையா, கு. க. நடராசா ஆகியோர் பரிசோதகர்களாக தெரியப்பட்டனர்.

நிர்வாகசபை யொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வியா

உடுவில் உதயசூரியன் சனசமூகநிலைய புதிய நிர்வாகிகள் தெரிவுக்கூட்டம் நடைபெற்றது. தெரிவு செய்யப்பட்டோர் விபரம் பின்வருமாறு:

தலைவர்: திரு ம ஜீவரத்தினம், உபதலைவர்: திரு நா தேவநேசன், செயலாளர்: திரு அ ஜெயருஜகுலேந்திரன், உபசெயலாளர்: திரு வ. ஜெபநாயகம், பொருளாளர்: திரு செ தேவநாயகம், உபபொருளாளர்: திரு வை இராசேஸ்வரன் விளையாட்டுத்துறைச் செயலாளர்: திரு சா ஜெஜினேஸ்தர்மருஜா, சரபத்தாட்ட தலைவர் திரு இ இராசரத்தினம், சரபத்தாட்ட உபதலைவர்: திரு ஏ டி இராசரத்தினம், கணக்குப் பரிசோதகர்: திரு மு வி செல்லத்துரை.

11 பேர் கொண்ட அங்கத்துவ செயற்குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

(உடுப், நி)

## "கருவாட்டு ஷெட்டுகளை இடம்மாற்றவும்"

யாழ்ப்பாணம், வெள்ளி

குருநகரில் கிடைக்கக்கூடிய முடிக்குரிய காணியில் புதியகருவாட்டு ஷெட்டுகள் அமைப்பது இப்பகுதி மக்களுக்குப் பல வகையில் உதவியாக இருக்கும் என்றும் தற்போதுள்ள ஷெட்டுகள் இப்பகுதிக்குப்பெரும் ஊறுவிளைவிப்பதாக இருப்பதாகவும் சுட்டிக்காட்டி இது விஷயமாக உடன் சம்பந்தப்பட்ட அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தி நடவடிக்கை எடுக்கும்படி யாழ்ப்பாண மேயர் திரு. அல்பிரட் துரையப்பாவை இலங்கை மீன்பிடி ஆலோசனைச்சபை அங்கத்தவரான திரு. ஜே ஏ. செல்வநாயகம் கேட்டுக்கொண்டுள்ளார்.

அவர் இது சம்பந்தமாக மேயருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இப்போது அமைந்திருக்கும் ஷெட்டுகள் மக்களின் சுகாதாரத்துக்குப் பெரிதும் பங்கம் விளைவிப்பதாக இருப்பதாகவும் இந்த ஷெட்டுகள் இருக்கும் இடத்துக்குத் தெற்குப் புறத்தில் பாவனையில்லாத துறைமுகத்தடியில் இருக்கும் காணி புதிய ஷெட்டுக்கள் அமைக்கப்பயன் படுத்தப்படலாமென்றும் எடுத்துக்கூறியுள்ளார்.

# உலக வலம்

## 'நன்றாக வாழ்கிறோம்'

பரிஸ், ஜூன் 17

உலகநாடுகள் சிலவற்றில் உள்ளகுறைபாடுகள் பிரான்ஸிலும் காணப்படுகின்றது எனினும் மக்கள் திருப்தியோடு வாழ்கிறார்கள். எப்பகுதியில் பார்த்தாலும் 'நாங்கள் நன்றாக வாழ்கிறோம்' என்ற குரலொலியை கேட்கலாம்.

பிரான்ஸிய அதிபர் பொம்பிடோவினதும் பிரதமர் டெல்மாசினதும் ஆட்சிக்காலத்தில் ஈராண்டுகள் பூர்த்தியாகிவிட்டன. முன்னேற்றம் எதுவும் இல்லை. பிரான்ஸின் வெளிநாட்டுக் கொள்கையில் இவர்கள் அடிக்கடி தடுமாறுகிறார்கள். அதன் கைத்தொழில்கள் காலத்துக்குக்காலம் கண்டனங்களுக்குள்ளாகின்றன.

பாடசாலைகளுக்குக் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்கள் எழுத்தளவிலேயேயுள்ளன. அநேகமான பிரான்ஸிய மக்கள் உணவு பொருட்களின் விலைதிகரிப்பு வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஆகியனபற்றி அதிருப்தியடைந்தாலும் பெரும்பான்மையானோர் 'நாங்கள் நன்றாக வாழ்கிறோம்' எனக்கூறித் திருப்தியடைகிறார்கள் அரசுக்கும் ஆதரவளிக்கிறார்கள்.

## அமெரிக்காவில் ரஷ்யர் முன்னிற்கின்றனர்

நியூயோர்க், ஜூன் 17

அமெரிக்காவில் சமீபத்தில் குடிசன மதிப்பீடு பல கோணங்களில் எடுக்கப்பட்டது. இன அடிப்படையில் எடுக்கப்பட்ட குடிசனமதிப்பீட்டின்படி ஜேர்மனி வம்சா வழியினர் 2 கோடி. ஆங்கிலேயர் 190 லட்சம் பேர். அயர்லாந்து மக்கள் 130லட்சம், ஸ்பானிய மக்கள் 90லட்சம், இத்தாலியர் 70 லட்சம், போலந்து மக்கள் 40 லட்சம், ரஷ்யர் 20 லட்சமாகவுள்ளனர்.

இம்மக்களின் வருமானத்தைக் கணக்கெடுத்தபோது ரஷ்ய வம்சாவழியினரே கூடிய வருவாயைப் பெறுபவர்களாகவுள்ளனர் ஸ்பானிய வம்சாவழியினர் ஆகக் குறைந்த வருமானத்தைப் பெறுகிறார்கள்.

தொழிலையடிப்படையாகக் கொண்டு நோக்குமிடத்தும் ரஷ்யவம்சாவழியினரே பெருமளவில் தொழில் நுட்பவேலைகளையும், உத்தியோகங்களையும் பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## யப்பானின் படைபலம்

ரோக்கியோ, ஜூன் 17

யப்பான் தனது சகல படைகளையும் பலப்படுத்த பல கோடி ரூபாய்களைச் செலவு செய்து வருகிறது. யப்பானின் படைபலம் பற்றி அங்குள்ள பாதுகாப்பு அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கையில் 'யப்பானின் இராணுவம் ஒரு சில வருடங்களில் மிகத் திறமை வாய்ந்ததாகிவிடும். கடற்படை ஆகக்குறைந்தது 15 வருடங்களாவது எடுக்கும். ஆகாயப்படை 10 ஆண்டுகளில் நாட்டின் சுயதேவையைப் பூர்த்திசெய்யத்தக்க அளவில் பலம் பெற்றுவிடும்' எனக் குறிப்பிட்டுள்ளனர்.

கிழக்கில் நல்ல பொருளாதார நிலையில் இருக்கும் யப்பானின் இராணுவம் ஆசியாவில் விரைவில் அச்சத்தை விளைவிக்கத்தக்கவகையில் பலம்பெற்றுவிடும் அணுவாயுத பலம் பொருந்திய சீனாவிலும் பார்க்க இராணுவ பலம் பெற்றுமுன்னேறிவரும் யப்பான் ஆசியாவில் பீதியைக்கொண்டு வரும்.

## இன்று மண்டலாபிஷேகம்

அரியாலை, வெள்ளி

திருநெல்வேலி ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோவில் மண்டலாபிஷேகப் பூர்த்திவிழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.

பகல் ஸ்ரீமுத்துமாரி அம்பாளுக்கு நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகமும், பரிவார மூர்த்திகளுக்கு ஸ்நபனாபிஷேகமும் நடைபெற்று இரவு திருவூசலும் நடைபெற்று பின் பூந்தண்டிகை உற்சவமும் நடைபெறும். மணல்தறை திரு. பொன்னையாவினால் புதிதாக உபயமாக வழங்கப்பட்ட விநாயகருக்கும் விசேட பூஜையும் உற்சவமும் இன்று நடைபெறும்.

## 'ஆலயங்களில் நைவேத்யம்'

தாவடி, வியாழன்

'ஆலயங்களிலே தினமும் நடைபெறும் பூசையின் போதும் இறைவன் திருமுன்பு படைக்கப்படும் நைவேத்யம் அந்தணருடைய இல்லத்திலே தயாரிப்பது கூடாது. ஏனெனில் உடன் ஆக்கப்படும் நைவேத்யமே சிறந்த நிவேதனமாகும். அதை ஆலயத்திலுள்ள மடைப்பள்ளியிலே ஆக்குவதுதான் சிறப்பாகும். அதுவே புனிதமான நைவேத்தியமுமாகும் என நம்பண்டையோர் கூறியுள்ளனர்.'

தாவடி ஸ்ரீஅம்பலவாண வேதவிநாயகராலயத்தின் கூட்டத்தில் உரையாற்றிய இளைப்பாறிய தலைமையாசிரியர் திரு. சு இராமலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்

மேற்படி ஆலய மண்டபத்தில் இளைப்பாறிய பிரதம கணக்காய்வாளர் திரு. செ. சோதிநாதன் தலைமையில் இக்கூட்டம் நடந்தது

# பௌத்தபிக்குகள் சீர்திருத்தத்துக்கு கலாசார அமைச்சு ஏற்பாடு

பௌத்த பிக்குகள் மத்தியில் ஒழுங்கு கட்டுப்பாடுகளை உறுதிப்படுத்தும் வகையில் அவர்கள் பற்றிய விபரங்களைப் பதிவு செய்து கொள்வது சம்பந்தமாக சிரேஷ்ட பிக்குமார்களின் கருத்துக்களை அறிவதற்கு கலாச்சார அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

தற்போதைய நிலையில் எந்த நபரும் தமது விருப்பத்தின்படி பௌத்த பிக்குவாக மாறிவிட முடியும். தலையை மொட்டையடித்துவிட்டு கடைகளில் ரூபா 50க்கு கிடைக்கும் மஞ்சள் அங்கி ஒன்றை வாங்கி உடுத்துக்கொண்டால் போதும். அதேபோன்று விரும்பிய நேரத்தில் அங்கியையும் விருப்பம்போல் கைவிட்டுவிடவும் முடியும். ஆனால் பௌத்த சங்கத்திற்குள் நுழைவதற்கும் வெளியேறுவதற்கும் குறிக்கப்பட்ட பௌத்த கோட்பாடு (வினய) இதுவல்ல. பௌத்த கோட்பாடுகளின்படி பௌத்த பிக்குவாக விரும்பும் ஒருவர் முதலில் பெற்றோரின் சம்மதத்தையும் தமது பௌத்தாலயத்தின் சிரேஷ்ட பிக்குமார்களின் சம்மதத்தையும் பெற்றுகவேண்டும். இவ்வாறு சம்மதம் பெற்ற ஒருவரே தகுதியானவரெனில் சிரேஷ்ட பிக்கு ஒருவரால் அபிஷேகம் பண்ணப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுவார். 'சங்கம்' பல பீடங்களாகவும், உபபிரிவுகளாகவும் பிரிந்து ஒவ்வொரு பிரிவும் தனக்கென தலைவர்களைக் கொண்டு விளங்குவதால் சங்கத்தைக் கட்டுப்படுத்தும் மத்திய அமைப்பு ஒன்றும் இல்லை. இதனால் பிக்குகளின் அபிஷேகம் பற்றிய விபரங்களை சேகரிக்கக்கூடியதாகவும் இல்லை. இலங்கையிலுள்ள பௌத்த பிக்குகளின் சரியான எண்ணிக்கையும் எவருக்கும் தெரியாது. 20 ஆயிரம் அல்லது 30 ஆயிரம் பேர் இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. சுமார் 6000 ஆலயங்களும் மடங்களும் இருக்கின்றன.

மேற்கூறிய நிலைமைகளின் காரணமாக யோக்கியமில்லாதவர்களும் கூட இந்த நாட்டில் மிகப் புனிதமாகக் கருதப்படும், மஞ்சள் அங்கியைப் பயன்படுத்திக் கொண்டு விடுகிறார்கள்.

பிக்குகளைப் பதிவு செய்து கொள்வதுடன் மதசார்பற்ற பல்கலைக்கழகங்களில் இவர்கள் தொழில்புரிவதற்கும் முற்றுப்புள்ளி வைக்க அமைச்சு விரும்புகின்றது. பிக்குகளின் கல்விக்கென உருவாக்கப்பட்ட வித்தியோதய வித்தியாலங்காரக் கல்லூரிகள் 1956-ம் ஆண்டில் பல்கலைக்கழகங்களாக மாற்றப்பட்டதன் பின்னர் கல்வி கற்ற பிக்குகள் மத்தியில் ஒழுங்கீனம் பெருமளவில் நிலைதொடங்கியிருப்பதாக அதிகாரிகள் கண்டுபிடித்திருக்கிறார்களாம்.

இந்த இரு பல்கலைக்கழகங்களும் ஏப்ரல் மாதம் மூடப்பட்டதற்குப் பின்னர் இன்னமும் திறக்கப்படவில்லை. அனுராதபுரத்தில் நிறுவப்படும் சர்வதேச பௌத்தபல்கலைக்கழகத்தில் மாத்திரமே பௌத்தபிக்குகள் தமது உயர் கல்வியைப் பெற்றுக்கொள்ள வழி செய்யவேண்டும் என்று யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பல்கலைக்கழகத்தில் மதசார்பான பாடங்கள் மட்டுமே கற்பிக்கப்படும். ஆனால் மதசார்பற்ற பல்கலைக்கழகங்களில் இவர்கள் பொருளாதாரம், அரசியல் போன்ற பாடங்களையும் படிக்கிறார்கள். பௌத்த சங்கத்தைச் சீர்திருத்தும் முயற்சிகளுக்கு அகில இலங்கை பௌத்த சங்கமும் ஆதரவு அளிக்க முன்வந்துள்ளது. பௌத்த ஸ்தாபனங்கள் பலவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த சக்தி வாய்ந்த ஸ்தாபனம் கடந்த பலகாலமாக பௌத்தபிக்குகள் அரசியலில் தலையிடுவதை எதிர்த்து வந்திருக்கின்றது.

இலைகளால் இலங்கையிலுள்ள பௌத்தபிக்குகள் எல்லாருமே தமது மதக் கடமைகளை மறந்து உலக விவகாரங்களிலேயே உழன்று கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. உலக ஆசைகளை துறந்து எதற்காக பிக்குவாக அபிஷேகம் பெற்றார்களோ அந்த லட்சியங்களுக்காகப் பாடுபடும் பெரும்பான்மையானவர்கள் இருக்கவே செய்திருக்கிறார்கள். இந்தப் பெரியவர்களின் தொண்டுகள் தான் பௌத்த உலகத்தில் இலங்கைக்கு மரியாதையைச் சம்பாதித்துக் கொடுத்திருக்கின்றது.

(சி. பி. ஏ.)

## சாயிபாபா இலங்கைக்கு வருவார்

கொழும்பு, வியாழன் பகவான் சத்திய சாயிபாபா இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கிறார். இவ்வாண்டு இறுதிக்குள் இவர் இங்கு விஜயம் செய்வாரென எதிர்பார்க்கப்படுகிறது. செப்டம்பர் மாதத்தில் இலங்கைக்கு விஜயம் செய்யலாமென பகவான் தமது சீடர்களுக்கு எழுதியுள்ளார். நோயைக் குணப்படுத்துவதற்காக அவர் இங்குவருவார்.

## தமிழ்த் தாத்தா

பருத்தித்துறை, வியாழன் "காலை மடங்கிலும் முதுமை எய்திலும் வறுமை வாட்டிலும் தமிழ்ப்பற்று உள்ளத்திற்கொழுந்துவிட்டெரிந்தால் தமிழுக்காக இறுதி மூச்சுள்ளவரை பணியாற்றலாமென்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் தமிழ் அறிந்த தாத்தா அந்த முருகேசனார் ஆவர். தமிழ் மொழியில் புதுமை நாடிப் புரட்சி செய்தவர். புதிய கருத்துகளை அள்ளி வீசியவர். அவருடைய பாதையைப்பின்பற்றுவதின் மூலம் தமிழுக்குப் புகழும் பொலிவும் தேடலாம்"

இவ்வாறு கரவை விக்னேஸ்வராக்கல்லூரி அதிபர் பண்டிதர் திரு. பொன். கணேசன் பருத்தித்துறை நகரசபை உபதலைவர் திரு. கே. சேனாதிராசா தலைமையில் நடந்த அந்த முருகேசனார் நினைவு தினக்கூட்டத்தில் பேசினார்.

## 'பிரதிஷ்டா வித்வஜோதி'

யாழ்ப்பாணம், வெள்ளி அராலியைச் சேர்ந்த சிவஸ்ரீ க. இ. சுப்பிரமணியக் குருக்களுக்கு அராலியில் 'பிரதிஷ்டா வித்வஜோதி' என்னும் பட்டம் வழங்கப்பட்டது. அராலி வடக்கு சிவன்கோவில் பிரதிஷ்டையின்போது இவர் பிரதம குருவாயிருந்து கிரியைகளை நடத்தினார். அப்போது சர்வபோதகராயிருந்த பிரம்ம குரு கொழும்பு முகத்துவாரம் சிவஸ்ரீ சோ. சீனிவாசசர்மா சுப்பிரமணியக் குருக்களைப் பாராட்டி மேற்படி பட்டத்தை வழங்கினார்.

## இளைஞர்களுக்கு விளையாட்டு வசதிகள்

பருத்தித்துறை, வியாழன் நெல்லியடிப் பட்டின சபைக்குட்பட்ட சிறுபான்மைத் தமிழருக்கென ஒரு விளையாட்டு மைதானத்தையும் விளையாட்டுவசதிகளையும் ஏற்படுத்தித் தருமாறு மேற்படி பட்டின சபையைக் கோரும் தீர்மானம் ஒன்று நேற்றுமுன்தினம் கனுவில் சனசமூக நிலையத்தினரால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. சிறுபான்மைத்தமிழர் வாழும் வட்டாரம் ஒன்றில் முடிக்குரிய காணியொன்று இருப்பதாகவும் அந்நிலத்தை இதற்காகப் பயன்படுத்தலாமென்றும் தீர்மானத்திற் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## கைநூல்கள்

பருத்தித்துறை, வியா. விரைவில் வடபகுதிப் பாடசாலைகளில் தொகுதிவாரியாக நடக்கவிருக்கும் பொதுவிஞ்ஞானக் கண்காட்சிகளில் 6-ம், 7-ம், 8-ம் வகுப்பு மாணவருக்குப் பயன்படக் கூடியமுறையில் அக்கண்காட்சிகளில் இவ்வித ஆய்வுகளை எவ்வாறு செய்வதென்பது பற்றிய விளக்கங்கள் அடங்கிய கைநூல்கள் சிங்கள, தமிழ் மொழிகளில் விற்கப்படவுள்ளன. மாணவருக்குப் பயன்படக்கூடிய முறையில் ஒன்பது முதன்மை ஆசிரியர்கள் இக் கைநூல்களைத் தயாரித்துவருகின்றனர்

## 4,000 நூல்கள்

உடுப்பிட்டி, வியா கொக்குவில் பல்கலை தொழில் நுட்பக் கழக (பொலி ரெக்னிக்) நூல்நிலையத்திற்கெனப் புதிதாக 4,000 நூல்கள், தளபாடங்கள் மூடப்பட்ட பலாலி பொலிரெக்னிக்கிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## "நல்லூர் ஆசிரியகலாசாலையை மூடாதீர்" — நல்லூர் எம். பி.

அரியாலை, வியா. நல்லூர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியை மூடவேண்டாம் என நல்லூர் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு சி. அருளம்பலம் அரசாங்கத்தை வேண்டியுள்ளார். நல்லூரில் மேற்படி கல்லூரி இருக்க வேண்டிய அவசியம் பற்றி கல்வி அமைச்சருக்கு அவர் கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார்.

நல்லூரில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியை இவ்வாண்டு டிசம்பருடன் மூடிவிட்டு கொழும்புத்துறையில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியை நவீன வசதிகளோடு கூடிய கல்லூரியாக அமைக்க அரசு உத்தேசித்துள்ளதாம்.

முன்னர் யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த ஐந்து ஆசிரிய பயிற்சிக்கலாசாலைகளில் தற்போது கோப்பாய் நல்லூர், பலாலி, கொழும்புத்துறை ஆகிய நான்கு இடங்களில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் நடைபெற்று வருகின்றன. திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையை சில வருடங்களின் முன் அரசு மூடியது தெரிந்ததே.

நல்லூரில் உள்ள ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி சுமார் இரண்டு ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ளது. சுமார் எண்பது ஆசிரிய மாணவர்கள் இங்கு பயிற்சி பெற்று வருகின்றனர்.

நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியை மூடுவதற்கு யாழ். மாநகரசபை முதல்வர் திரு. அல்பிரட் துரையப்பாவும் தமது ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக யாழ். மாநகரசபை நல்லூர் வட்டார உறுப்பினர் திரு. அ. நடராசாவைத் தலைமையாகக் கொண்ட குழு ஒன்று கொழும்பு சென்று உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதுடன் நல்லூரில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இருக்க வேண்டிய அவசியத்தைச் சுட்டிக்காட்டும் மகஜர் ஒன்றையும் கல்வி அமைச்சருக்கும் பிரதமர் அமைச்சருக்கும் இக்குழு வழங்கியுள்ளது. யாழ். மாநகரசபையின் உறுப்பினர்கள் இது பற்றி உயர் கட்டம் ஒன்றைக் கூட்டி அரசுக்கு மகஜர் ஒன்றை அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிகிறது.

## மறைவுக்கு அனுதாபம்

உடுப்பிட்டி, வியாழன் கொக்குவில் பல்கலை தொழில் நுட்பக்கழக வணிகத்துறை மாணவியான செல்வி. வீ. நாகேஸ்வரியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக விரிவுரையாளர்களும் மாணவ மாணவிகளும் மறைந்த மாணவியின் பெற்றோருக்கு தமது ஆழ்ந்த துக்கத்தைத் தெரிவித்துக்கொண்டனர்.

## ப. நோ. கூ. சங்க நிர்வாகிகள்

அரியாலை, வியா புனரமைக்கப்பட்ட வலிகிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் நெறியாளர் குழுவின் தலைவராக இளைப்பாறிய ஆசிரியர் திரு க இ குமாரசாமி கூட்டுறவு ஆணையாளரால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கோப்பாய் வடக்கு பலநோக்குக் கூட்டுறவுசங்கத்தின் தலைவராகவும், யாழ் கூட்டுறவு மாகாண வங்கியின் இயக்குனராகவும், வடபகுதி விளைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் அதிகாரசபை உறுப்பினராகவும் கடமையாற்றுகின்றார். இக்குழுவின் உறுப்பினராக திருவாளர்கள் செ நடராசா, எஸ் செல்லத்துரை, எஸ் தேவேந்திரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நீர்வேலி வலிகிழக்குத் தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் திரு க இராசரத்தினம், உபதலைவர்: எஸ் டபிள்யு வடிவேலு, நிர்வாகிகள்: திருவாளர்கள்! எஸ் திருஞானசம்பந்தமூர்த்தி, எஸ் ஆலாலசுந்தரம், ஆர் சிகவலிங்கம், பொதுமுகாமையாளர்: திரு என் குமரேசபதி,

## நாகதம்பிரான் ஆலய உற்சவம்

உடுப்பிட்டி, வியாழன் புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்தப் பொங்கல் எதிர்வரும் 21-ம் திகதி வழமைபோல் சிறப்பாக நடைபெறுமென ஆலயப் பூசகர் தெரிவித்தார். அன்றையதினம் விசேட இ.போ.ச. பஸ் போக்குவரத்து நடைபெறுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

## மாட்டுவண்டி சவாரி

சுழிபுரம், வியாழன் பொன்னாலை வரதராஜப் பெருமான் கோவிலுக்குப் பின்புறமாகவுள்ள திறந்த வெளியில் மூளாய் வாலிபர்களால் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி ஒன்று நடாத்தப்பட்டது. மூன்று பிரிவாக நடைபெற்ற இப்போட்டியில் பல்வேறு இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட காளைமாடுகள் கலந்துகொண்டன. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சுழிபுரம் கிராம சபைத் தலைவர் திரு க கந்தசுவாமி பரிசுகளை வழங்கினார்.

## மாணவனை கடத்த முயன்றனராம்

குருநகர், வியாழன் கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் கல்லூரி ஒன்றில் படிக்கும் ரவிசங்கர் என்ற 11 வயது மாணவனைக் கடத்த முயற்சித்ததாக யாழ். பொலிசில் புகார் செய்யப்பட்டதைத்தொடர்ந்து கடத்த முயற்சித்தவர்களில் ஒருவரை சந்தேகத்தின்பேரில் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பாடசாலை வகுப்பில் படித்துக்கொண்டிருந்த இந்த மாணவனை மாணவனின் தந்தைக்குகடும்சுகவீனம் என்று கூறி அவனை ஏமாற்றி கூட்டிச் செல்ல முயன்றதாக கூறப்படுகிறது.

## உற்சவம்

மானிப்பாய், வியாழன் வருடாந்த உற்சவம் இப்போது நடைபெற்றுவரும் ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் ஆலயத்தில் திருப்பூங்குடி சிவஞானச் செல்வர் வி கே ஆறுமுகம் மாலை வேளைகளில் தினமும் கதாப்பிரசங்கம் நிகழ்த்திவருகிறார். எதிர்வரும் 22ந் திகதி காலை 8 மணிக்கு தேர்த்திருவிழா ஆரம்பமாகி நடைபெறும். 24ந் திகதி நடைபெறவிருக்கும் பூங்காவனத் திருவிழாவுடன் உற்சவங்கள் பூர்த்தியாகும்.

## காங்கேசன்துறையில் அரிசிக்கப்பல்

மாவிட்டபுரம், வியாழன் "மில்சாட்" அரிசியுடன் காங்கேசன்துறைக்கு ஒருகப்பல் வந்துள்ளது. 5332 தொன் "மில்சாட்" அரிசியை ஏற்றிவந்துள்ள பர்மாவைச் சேர்ந்த சவாட்சமுத் என்னும் இக்கப்பலில் இருந்து இறக்குமதி வேலைகள் மிகவும்துரிதமாகநடைபெறுகிறது.

கே ஜெயபாலசிங்கம் ஏஜெண்டாக இருக்கும் இக்கப்பலில் இருக்கும் இறக்குமதி வேலைகளை யாழ். மாவட்ட துறைமுக சேவாசமாசம் செய்துவருகிறது.

**மணிவாக்கு**

பகைவர் அயலோர் நட்பினர் என்னும் இம் மூவகையோரிடத்தும் தருமத்தின் வழுவாமல் ஒப்பநிற்றல், நடுவுநிலைமை எனப்படும்.

—நாவலர்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

திருவள்ளுவர் விரோதிகிருது வருஷம் ஆனிமாதம் 4-ந் திகதி (18-6-71)


## குடியிருப்புப் பிரச்னை

உண்மையான சோஷலிஸ நாடுகளில் சராசரி மக்கள் உழைப்பில் காட்டும் ஆர்வத்தையும் அக்கறையையும்விட நம் நாட்டு மக்கள் சோஷலிஸம் என்ற பெயரில் அரிசி, கல்வி, போக்குவரவு, வேலைவாய்ப்பு ஆகிய சகலமுமே இலவசமாகப் பெற்று சோம்பேறிகளாகி விட்டார்கள் என்று பொதுவாகக்குறை கூறப்படுகிறது. இதில் தவறு சொல்வதற்கு இடமில்லை.

அடுத்தடுத்து ஆட்சி பீடத்திற்கு வந்த அரசாங்கங்கள் நாட்டின் பிரஜைகளுக்கு அவர்கள் வாழ்வதற்கு வேண்டிய அத்தியாவசியத் தேவைகளை அளிப்பது தமது கடமையெனக் கருதின. துரதிர்ஷ்டவசமாக அரசாங்கங்களின் இப்பெருந்தன்மையை மக்கள் தவறாகக் கருதி எல்லாவற்றையும் இலவசமாகப் பெறுவது தங்கள் உரிமையென நினைத்துக்கொண்டார்கள். இதனால் மக்கள் தங்கள் கடமையை மறந்துவிட்டார்கள் என்று சொல்வது பொருத்தமாகும்.

உணவு, உடை, வசிப்பிடம் ஆகியவையே ஒரு மனிதனின் அத்தியாவசிய தேவைகள் என்பது ஆரம்ப வகுப்பில் இன்று நமது பிள்ளைகள் படித்துவரும் ஒரு பாடமாகும். நமது நாட்டு இலவசப்பட்டியலில் இந்த "வசிப்பிடம்" இடம்பெறவில்லையென்பது கவனத்துக்குரியது. ஆயினும் குடியிருப்புப் பிரச்னையை உதவிகள் மூலம் திருப்திகரமாகத் தீர்ப்பதற்கு அரசாங்கம் பெரும் பாடுபடுகிறதென்பதை ஒப்புக்கொள்ளவேண்டும்.

பாட்டாளிகளும் நடுத்தர வகுப்பினரும் தமக்கெனச் சொந்த நிலமில்லாததால் வசிப்பதற்குச் சொந்த இடமுமில்லாமல் நிலச் சொந்தக்காரரின் தயவில் அவர்களின் கூரையின் கீழ்த்தான் வாழவேண்டிய நிர்ப்பந்தம் கடந்த பலஆண்டுகளாக இருந்து வருகிறது. இதர பல பிரச்னைகளைப் போன்று இதுவும் ஒருபெரும் பிரச்னையாக இருந்து வருகிறது. இதைத் தீர்ப்பதற்கு அரசாங்கங்களும் முயற்சி செய்து வந்துள்ளன. ஆனாலும் குடியிருப்பாளருக்கோ நிலச்சொந்தக்காரர்களுக்கோ ஊக்கமளிக்கக் கூடியதாகவோ நிலைமை சீர்செய்யப்படவில்லை.

இந்நிலையில் இவ்விடம் தேடியலையும் மக்களுக்கு ஆறுதலளிக்கும் வகையில் வீடமைப்பு கட்டட நிர்மாண அமைச்சர் திரு. பீட்டர்கெனமன் விடுத்துள்ள அறிக்கை ஆறுதலளிப்பதாகும்.

உடன், நிலம், கட்டிடம், வாடகை ஆகிய நான்கு முக்கிய அம்சங்களைக் கொண்ட அமைச்சரின் பெரிய திட்டத்தில் உத்தேச நிலத்தர்மசர்த்தா முறை அடிப்படைப் பிரச்னைகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பலரும் பார்த்து வயிறெரிச்சல் படும் தரிசாகக் கிடக்கும் நிலங்களையும் அபிவிருத்தி செய்யப்படாமல் சேரிகள் நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக முளைத்துத் தளைக்கும் நிலங்களையும் குடியிருப்புக்கு நல்ல முறையில் பயன்படுத்துவதுதான் இத் திட்டத்தின் அடிப்படையாகும். சேரி இல்லாத நகரசுசிங்கப்பூர் சிறந்த உதாரணமாக எடுத்துக்காட்டப்படுகிறது. இதற்கு அந்த அரசாங்கத்தின் சளைக்காத முயற்சியே காரணமென்று சொல்லலாம். தமிழ்நாட்டிலும்கூட குடியிருப்புப் பிரச்னையையும் சேரிஒழிப்பையும் திட்டமிட்டுச் செயலாற்றும் பொருட்டு அரசாங்க வீடமைப்புச் சபையொன்று நிறுவப்பட்டிருக்கிறது. சேரிகளை ஒழித்து சேரிவாழ் மக்கள் சுகாதாரத்துடன் வாழக்கூடிய உறுதியான வீடுகள் கட்டுவதற்குத்திட்டமிடப்பட்டுள்ளது. சேரிகளை ஒழிப்பதில் கடந்த காலத்தில் நாம் செய்த தவறுகளுக்கு மீண்டும் இடமளிக்கக் கூடாது. இதில் அரசியல் தலையீட்டுக்கும் மீண்டும் அனுமதிக்கக்கூடாது. அரசியல் தலையீடு அரசாங்கத்தின் நல்லநோக்கத்தையுமே கெடுத்துவிடும். அரசியல் தலையீடுகளையும் நிர்ப்பந்தங்களையும் சமாளிப்பது சுலபமில்லாதது தான் ஆனாலும் அமைச்சரின் திட்டம் செயலாக வேண்டியது அவசியம்.

தனியார் துறையினரும் வீட்டுப் பிரச்னையைத் தீர்க்க முன்வரவேண்டுமென்று அமைச்சர் அழைத்துள்ளார். அமைச்சர் என்ன செய்வாரோ என்று அஞ்சிய தனியார் துறையினருக்கு ஆறுதலிக்கவேண்டும். தனியார் துறையினரின் ஒத்துழைப்பு வீடில்லாப் பிரச்னையைத் தீர்ப்பதற்கும் அவசியமாகும். குடியிருப்புப் பிரச்னையின் அடித்தளத்தை அமைச்சர் நன்குணர்ந்து அதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்குச் சரியான முறையில் அஸ்திவாரமிட்டுள்ளார். அதைச்செயல்படுத்தி அமைத்து முடிப்பது அதிகாரிகளினதும் மற்றையோரினதும் கடமையாகும். இது உடனடியாக நிறைவேற்றி முடிக்கக்கூடிய காரியமல்லவானாலும் குடியிருப்பாளரோ, நிலச்சொந்தக்காரரோ ஒருவரையொருவர் ஏமாற்றவும் நஷ்டமும் கஷ்டமும் அடையவும் இடமில்லாமல் பிரச்னைக்குத்தீர்வுகாணப்படவேண்டியதன் அவசியத்தை அமைச்சர் சரியாக உணர்ந்துள்ளதாகவே தெரிகிறது.

குடியிருப்புப் பிரச்னை ஒரு தேசியப் பிரச்னை. குடியிருப்பாளரும் நிலச் சொந்தக்காரரும் இப் பிரச்னையில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்கள் என்பதை மறந்துவிடலாகாது.

---

**தாவடியில் சம்பவம்**

## பதிவுத்திருமணம் செய்த இளம் ஜோடி தற்கொலை

யாழ்ப்பாணம், வெள்ளி

பெற்றோரின் விருப்பத்திற்கு மாறாக திருமணப் பதிவு செய்து 2 வருடகாலம் மனைவி வீட்டில் சந்தோஷமாக வாழ்க்கை நடத்திய வாலிபரும், அவரது மனைவியும் சமயாசாரப்படி திருமணம் செய்யுமுன்னரே ஒரே நேரத்தில் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் நேற்று தாவடியில் நிகழ்ந்துள்ளது.

நல்லையா கந்தசாமி (25 வயது) அவரது மனைவி இராஜலட்சுமி (வயது 18) ஆகியோரின் மரணவிசாரணையின் போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது. மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். இராஜநாயகம் மரண விசாரணை நடத்தினார்.

கந்தசாமி சம்பவம்நடந்த சில மணிநேரத்தில் மரணமானார். அவரது மனைவி ராஜலட்சுமி மறுநாள் மரணமானார். இருவரும் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்கள்.

ராஜலட்சுமியின் மூத்த சகோதரியான சகுந்தலாதேவி (வயது 22) சாட்சியமளிக்கையில் கூறியதாவது: இறந்தவர் என் சகோதரி, இறந்த என் மைத்துனர் கந்தசாமி பதிவு நடந்தது முதல் 2 வருடகாலமாக எங்கள் வீட்டில் வசித்து வந்தார். என் சகோதரியும் கந்தசாமியும் சந்தோஷமாகவே வாழ்ந்து வந்தார்கள். எனது திருமணம் நடந்த பின்தான் தனது திருமணம் நடக்க வேண்டுமென சகோதரி விரும்பியதால் திருமணம் நடக்கவில்லை.

சம்பவம் நடந்ததினம் 'அம்மா அம்மா' என்று குளறிக் கேட்டது அப்பொழுது நான் வீடு கூட்டிக்கொண்டிருந்தேன். உடனே நான் ஓடியபோது அவர்கள் வந்தார்கள் இருவருக்கும் முதல் சிகிச்சையாக தேங்காய்பால் கொடுத்தோம், பின் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்கள். என் தங்கையும், மச்சானும் எதற்காக நச்சுத்திராவகம் குடித்தார்கள் என்று தெரியவில்லை. இருவரும ஒன்றாகவே சாப்பிடுவார்கள். ஆனால் இருவரும் இரவில் தனித்தனியாக நித்திரைக்குச் செல்வார்கள். எனக்குத் தெரிந்தவரை அவர்கள் கணவன் மனைவியோக வாழவில்லை.

இராஜலட்சுமியின் தகப்பன் கந்தையா சின்னத்தம்பி கூறியதாவது:

இறந்தவர் என் மகள். 2 வருடத்தின் முன் கந்தசாமி என்பவரை திருமணப்பதிவு செய்தார். அதன்பின் கந்தசாமி எங்களுடன் இருந்தார். இடைக்கிடை அவர் உடுவிலிலுள்ள தன் பெற்றோர் வீட்டிற்குச் சென்று வருவதுண்டு. அவரின் பெற்றோருடன் நாங்களும் கோபதாபமாக இருந்தோம். அவரின் பெற்றோர் இத்திருமணத்திற்கு எதிராக இருந்தார்கள். கந்தசாமியும் என் மகளும் சமயாசாரப்படி திருமணம் செய்யாவிட்டாலும் ஒன்றாகவே உணவருந்தி ஒன்றாகவே வாழ்ந்துவந்தார்கள். ஒரு வருடத்தின் முன் என் மகளுக்குக் கருச்சிதைவு ஏற்பட்டது.

சம்பவம் நடந்த தினம் நான் தோட்டத்தில் இருந்தேன் என் வீட்டுப் பக்கம் குளறிச் சத்தம் கேட்டது. நான் வீட்டுக்கு ஓடிப்போனேன். என் மகளும் கந்தசாமியும் நச்சுத்திராவகம் குடித்திருந்தார்கள். இருவரையும் உடனடியாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதித்தோம். கந்தசாமி உடனடியாக மரணமானார். என் மகள் மறுநாள் மரணமானார்.

இருவர் மரணம் பற்றியும் நடந்த விசாரணைகளின் பின் தற்கொலை என மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

## யாழ். இந்து, யாழ். மத்திய கல்லூரி அதிபர்கள் மாற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி புதிய அதிபராக திரு ச. சபாலிங்கம் நேற்றுப் பதவியேற்றார். அவர் கல்லூரிக்குச் சென்று பதவியேற்பதற்கு முன்பாக அவரது அன்பர்களும் வண்ணார் பண்ணைப் பிரமுகர்களும் அவரை கல்லூரி விளையாட்டு மைதானத்திலுள்ள வைரவர் ஆலயத்துக்கு அழைத்துச் சென்று விசேஷ ஆராதனையில் கலந்துகொள்ளச் செய்தனர்.

திரு சபாலிங்கம் கடந்த சில வருடங்களாக யாழ் மத்திய கல்லூரி அதிபராகக் கடமையாற்றி வந்தார். சில வாரங்களுக்குமுன் அவர் இந்துக்கல்லூரி அதிபராக இடமாற்ற உத்தரவு பெற்றிருந்தாராயினும் அந்த உத்தரவு திடீரென்று ரத்துச் செய்யப்பட்டது.

யாழ் இந்துக் கல்லூரிப் பதில் அதிபராகக் கடமையாற்றிய திரு மு. கார்த்திகேசன் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டமையடுத்து காலியான அந்த இடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்த கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரி அதிபராகவிருந்த திரு ச. கே. சண்முகநாதன் கடந்த வாரம் தான் யாழ் இந்துக் கல்லூரி அதிபராகப் பொறுப்பேற்றிருந்தார். சுமார் ஏழு தினங்களில் திரு சண்முகநாதன் யாழ் மத்திய கல்லூரியின் அதிபராக இடமாற்றம் பெற்று நேற்றுப் பதவியேற்றுக் கொண்டார்.

### கப்பல் பற்றி—

1-ம் பக்கத் தொடர்ச்சி

பட்ட கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கான காலத்தை நீடிப்பதற்கு உலக வங்கி மறுத்ததினால் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியான அந்நியச் செலாவணியை இலங்கைக்குக் கொடுத்துதவ மக்கள் சீனக் குடியரசு தயாராக இருப்பதாகவும் ஒரு கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

### இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் சுக்கிரவாரமாகிய இன்று மாலை 6—7 மணிவரை திருப்பூம்குடி வி. க. ஆறுமுகம் அவர்களின் கந்தபுராண தொடர் பிரசங்கமும் இரவு 7 மணிக்கு சுக்கிரவார அம்மன் உற்சவமும் சுவாமி உள்வீதிவலமும் நிகழும்.

---

### தமிழரசு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் நிர்ணயசபையில் உள்ள அனைவரும் முதலாவது தேசிய சபையில் அங்கம் வகிப்பர் என்றும் கூறப்பட்டுள்ளது, அப்படியாயின் நியமன அங்கத்தவர்களான ஆறுபேரும் முதலாவது தேசியசபையில் அங்கம்வகிப்பர் என்பதே கருத்தாகும். நியமன அங்கத்தவர்கள் தேசிய சபையில் அங்கம் வகிப்பதை நான் எதிர்க்கிறேன். இந்தத் திருத்தத்தை நான் சமர்ப்பிக்கிறேன் என்றார்.

அமைச்சர் கொல்வின் பேசுகையில் ஜனங்கள் அங்குமிங்கும் பிரிந்து இருப்பதால் ஒவ்வொரு தொகுதிகளையும் சம வாக்குகளைக் கொண்டதாகப் பிரிக்க முடியாது என்றும் ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகளை இனவிகிதாசார அடிப்படையில் ஒதுக்குவது எப்பொழுதுமே நல்லமுறையில்வெற்றியளிக்கவில்லை என்றும் கூறினார்.

6-வது அடிப்படைத் தீர்மானம் நிறைவேறியது- 7-வது அடிப்படைத் தீர்மானம் மீதான விவாதம்நேற்று ஆரம்பமாகியது. (சி பி ஏ)

### நிறைமாத..

1-ம் பக்கத் தொடர்ச்சி

வாசலுக்குக் கொண்டுவரப்பட்டது. வண்டிச் சாரதி வண்டியை நிறுத்திவிட்டு வீட்டுக்குள் சென்றுவிட்டார். கமலாம்பிகை வண்டியில் ஏறிக்கொண்டதும் மாடுகள் சாரதியில்லாமல் வண்டியை இழுத்துக்கொண்டு ஓடத்தொடங்கிவிட்டன சுமார் 30 யார் தூரத்தில் சென்றுகொண்டிருந்த வண்டியிலிருந்த மாடு ஒன்று நுகத்திலிருந்த கயிற்றை அறுத்துக்கொண்டு ஓடத் தொடங்க, வண்டியிலிருந்த கர்ப்பிணிப் பெண் கமலாம்பிகை கீழே விழுந்து வண்டிச் சில்லுக்குள் அகப்பட்டுக்கொண்டார் உடனடியாக மல்லாகம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இங்கு மரணமானார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. மரணமானவருக்கு ஒரு குழந்தை உண்டென்றும் கூறப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். இராஜநாயகம் விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார்.

## வெங்காய விநியோகம்

கோட்டை, வியாழன்

அடுத்த மாதம் முதல் யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் சின்ன வெங்காயத்தைக் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் விநியோகிக்கவுள்ளது.

வடபகுதி விவசாய உற்பத்தி விற்பனையாளர் சமாசத்துக்கும், கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்துக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை வெற்றியளித்ததை அடுத்து கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் வெங்காய விநியோகத்தை மேற்கொள்ளவிருக்கிறது. கட்டுப்பாட்டு விலையில் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் வெங்காயத்தைக் கூ. மொ. வி. விநியோகிக்கும்.

### ஊரடங்கு நேரம்

இரவு 10-00 மணி முதல்
காலை 4-00 மணி வரை

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு ஜூன் மீ 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.